# தென்மொழி

ஆசிரியர்: பெருஞ்சித்திரன்




25 காசுகள்

15-3-60

இலக்கியத் திங்கள் ஈரிதழ்.

கண்ணன்

அட்டை விளக்கம்

# முன்னே தமிழ்..............!

கற்றைக் குழலும் கருங்குவளைப் பூவிழியும்
ஒற்றைத் திருநுதலும் ஒல்கிடையும் காட்டிடினும்
அற்றைத் தமிழ்த்தாய் அருந்துயரம் நீக்காமல்
மற்றைக் கிசையேன் மனம் !

அள்ளுங் கொடியுடலும் ஆர்க்கும் எழில்மார்பும்
வள்ளைத் திருக்காதும், வாயழகும் காட்டிடினும்
கள்ளத் தயர்ந்த கனித்தமிழை மீட்காமல்
உள்ளத் திருத்தேன் உனை!

முத்து நகையும், முழுமை நிலாமுகமும்
தொத்திப் பிணைகையும் தோளெழிலும் காட்டிடினும்
பித்தர் சிதைக்கும் பெருந்தமிழைக் காக்காமல்
ஒத்துக் கொளாதென் உளம் !

நெற்றி வகிரும், நெடுங்கை விரலுகிரும்,
சுற்றிப் பிணையும் சுடர்காலும் காட்டிடினும்
முற்றி முதிர்ந்த முழுத்தமிழைப் பேணுமல்
பற்றிப் படரவிடேன் பார் !

**கருத்திற் பதிக்க**

இவ்விதழில் வரும் கதை, கட்டுரை, பாடல்களின் கருத்துக்களும். பெயர்களும், அவற்றால் வரும் நிறை குறைகளும் அவற்றை எழுதிய, ஆசிரியர் தம்மைச் சாருமேயன்றி இதழ் ஆசிரியரை எவ்வகையானும் சாரா.

— ஆசிரியர்

# தென்மொழி

இலக்கிய இதழ்


'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்தம் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!


இயல் ௧ | திருவள்ளுவராண்டு ௲௯௯௧ பங்குனித்திங்கள் ௨ (15-3-60) | இசை ௧௫


# மக்கள் ஒழுங்கு.

இன்றையத் தமிழகத்தில் பெரும்பாலோர்க்கு வயிற்றைப் பற்றிய கவலைகள் இருப்பதைப் போலவே நல்லவர் சிலர்க்கு மக்கள் ஒழுக்கக் குறைவைப்பற்றிய கவலைகள் பெருத்த நெஞ்சு வலியாகப் பீடித்திருக்கின்றன. மக்களிடத்தில் ஒழுக்கம் குறைந்துவிட்டது என்பதைப்பற்றிக் கவலைப்படாதவன் எவனோ அவன் ஒருகால் சோம்பேறியாகவோ, அன்றி அறிவிலியாகவோ அதுவுமன்றி ஒழுக்கக் கேடனாகவோதான் இருத்தல் முடியும். ஒழுக்கம் உண்மையாகவே குறைந்துள்ளது என்பதற்கு, நாடுமுழுதும் கல்வி நிலையங்கள் பெருகுவதைப்போல் ஊர் காவல் நிலையங்களும் (Police Stations) மருத்துவ நிலையங்களும் (Hospitals) அளவற்றுப் பெருகியுள்ளதே வலிந்த சான்றாகும். ஒழுக்க மில்லாதான் உளத்தால் கெட்டு, அறிவால் இழிந்து பிறர்க்குத் தீமை செய்யுங்கால் அவனைத் தடுக்க ஊர் காவலரும், அவன் தன் உடலால் கெட்டு உயிரைச் சீரழித்துக் கொள்ளுங்கால் அவனைக் காக்க மருத்துவரும் முன் நிற்கின்றனர். இவற்றிற்கேயன்றி நல்லவர்க்குக் காப்பாகவும் ஊர் காவலர் அமைவதுபோல், நல்லவர்க்குப் பிணி போக்கவும் மருத்துவர் அமைந்திருக்கின்றனர். இவ்விரு நிலையங்களையும் அணுகி அங்குவரும் செய்திகளைப் பற்றிய உண்மைகளை ஆராய்ந்தறிவோர், நாம் கூறிய ஒழுக்கக்கேடு என்ற பெருநோய் தமிழ் நாட்டை எவ்வளவு பீடித்திருக்கின்றது என்று தெளிவாய் உணர்வர்.

இனி, இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன? என்பதைப் பற்றிப் பலரும் பலவாறு கருத்தறிவிக்கின்றனர். அவருள் இரு சாராரின் குரல்கள் மட்டும் வானளவு ஓங்கியிருக்கின்றன.

'ஒழுக்கத்தையே முற்றும் எடுத்துக்கூறி மக்களை நன்னெறிப்படுத்தும் சமயப் பயிற்சி இக்காலத்தே குறைந்ததும், போலிப் பகுத்தறிவு உணர்வு தலையெடுத்ததுமே அதற்குக் காரணமாகும்'' என்று சமயத் தலைவர் சிலர் கூறி வருந்துகின்றனர். இதுபோலவே பகுத்தறிவாளரில் சிலரும், ''பகுத்தறிவு உணர்ச்சி சரிவரப் பரப்பப்படாமல், சமயப் பித்தர்தம்மால் கீழ்த்தரச் சமய உணர்வு மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் பரப்பப் பெறுவதே இத்தகைய ஒழுக்கக் கேட்டுக்குத் தலையாய காரணமாகும்'' என்று வலித்துக் கூறுகின்றனர். இனி, இவர் இருவரும் ஒருமுகமாக நின்று, மேல்நாட்டுப் போலி நாகரிகப் புன் பகட்டாலும், திரை ஓவியம் (Cinemas) முதலியவற்றால் காட்டப்பெறும் ஒழுக்கக்குறைவான காட்சிகளாலும் இத்தமிழ்நாட்டின் ஒழுக்கம் தட்டுக்கெட்டுப் போயிற்று'' என்றும் குரலெடுத்து பேசுகின்றனர்.

இவர் கூற்றுக்களை அணுகி உண்மை காண முற்படுவோம்.

சமயத்தில் பற்றுக் குறைந்ததாலேயே ஒழுக்கம் குறைந்து விட்டது என்பார் அச்சமய நெறிமுறைகளில் ஆழ்ந்துகிடப்போரும், இறைநெறிபற்றி ஓயாமல் மக்களிடையே வாயாடுவாரும், பெரும்பாலும் ஒழுக்கங்கெட்டுக் கிடத்தலை நுணுகியறியத் தலைப்பட்டால் சமயப்பற்றுக் குறைவே ஒழுக்கக் கேட்டிற்குக் காரணம் என்று கூற முற்படார். சமய விழுப்பங்காரணமாக சமயத் தலைவரைத் தெய்வமாகக் கருதி அவரிடம் அச்சமின்றி அணுகும் குடும்பப் பெண்டிரையும் கூட அவர் தம் ஒழுக்கக் கேட்டிற்கு இலக்காகிக் கொள்கின்றரெனின், அச் சமயப்போர்வையில் வாழும் இளைஞரைப்பற்றிக் கேட்கவும் வேண்டுவதில்லை. மேலும் இறைமயக்கம் காரணமாக இவர்பால் அணுகும் பெண்டிரும் மிகுதி. அவர்தம் திருவும் அமைதியும் இவர்க்கு மேலும் ஒழுக்கக்கேடான எண்ணங்களைப் பரப்புகின்றன. இல்லறத்தில் தன் கணவனோடு வாழ்க்கையில் தன்னை ஒப்பனை செய்து கொண்டு அவனை மகிழ்விக்காத பெண்ணும், இவர் தம்பால் செல்லுங்கால் தன்னை மிகுவாக அழகு செய்து கொள்கின்றாள். இவையெல்லாம், சமய நெறியில்

தீய எண்ணம் கொண்டோர்க்கு எவ்வளவு வாய்ப்பும் சூழ்நிலையும் கிடைக்கின்றன என்பதைத் தெளிவாகக் காட்டும். இவை உண்மையாக விருக்க, சமய நாட்டக்குறைவே ஒழுக்கக் கேட்டிற்குக் காரணம் என்பதில் ஒரு பொருளும் இல்லாமற் போகின்றது.

இனிப், பகுத்தறிவில் மேம்பட்டு விளங்குவார் போல் நடித்துப் பகுத்தறிவு பற்றிச் சொற்பொழிவுகள் நடத்தி நாட்டு மக்களைத் திருத்துவோரில் பலர் ஒழுக்கக் கேடராக விருக்கின்றனர். சமயத்தலைவரைப் போலவே இத்தலைவரும் பிறரிடம் எளிதில் பழக வாய்ப்பும், செல்வமும் மிகுதியாகக் கொண்டவராக விருக்கின்றனர். சமயத்தலைவர்க்கேனும் அச்சம், பெருமை, இவை காப்பாக இருந்து சிறிது கட்டுப்பாடு செய்யுமாயினும், இவர்க்கு அக்கட்டுப்பாடுகளுமின்றி அவிழ்த்து விட்ட காளைகளைப்போலவும், கரையின்றிப்பாயும் காட்டாற்று வெள்ளம் போலவும் இவர் தங்கு தடையின்றிக் கெட்டுப்போக வாய்ப்புக்கள் கிடைக்கின்றன.

இந்தக் கருத்துக்களை ஊன்றி உணர்வார்க்குப் பல உண்மைகள் புலப்படும். ஒரு சமயத் தலைவர் "மனம்" என்று கூறிக்கொண்டு மக்களை நெருங்குகின்றார். இவர் அறிவு பற்றி மிகுவாகக் கவலைப் படுவதில்லை. ஒரு பகுத்தறிவுத் தலைவர் "அறிவு" என்று கூறிக்கொண்டு மக்களை நெருங்குகின்றார். இவர் மனத்தைப் பற்றி மிகுவாகக் கவலைபடுவதில்லை.

இந்தக் கருத்தை நாம் கூறியவுடன், "அறிவும் சமயமும் ஒன்றாகப் பின்னிப் பிணைய வேண்டும்" என்று கூத்திடும் அரைப்பங்குச் சமயப்பற்றும் அரைப்பங்கு அறிவும் கொண்ட ஒருசிலர் தம்மையே எல்லாம் அறிந்தவராக எண்ணிக் கொண்டு கூத்திட முற்படுவர். ஆதலின் இக்கூற்றையும் நன்கு விளக்கியாதல் வேண்டும்'

உலகில் உள்ள சமயங்கள் எல்லாம் மக்களின் உள்ளத்தை வளர்க்கவே, அருளும் அறிவும் உடைய பெரியவர் தம்மால் தோற்றுவிக்கப் பெற்றன. எனினும் அவர்தம் கருத்துப்படியே வளர்ந்து வராதனவாய்க் காணப் பெறுகின்றன. இவற்றிற்குக் காரணம் அவற்றின் கட்டுப்பாடுகளே, ஆம். இதனை நன்கு ஆராய்வோம்.

ஒழுக்கக் கட்டுப் பாடுகளாலேயே உள்ளமும், அதன் பண்பும் வளரும். ஆனால் அறிவு வளராது; எங்குக் கட்டுப்

பாடுகள் மிகுதியாக உள்ளனவோ அங்கு அறிவு உண்மையாக வளரவே வாய்ப்பில்லை. அறிவு வளர்ச்சி கட்டுப்பாடுகளை உடைத்துக் கொண்டு புறம் பாயும் ஓர் உணர்வு வெள்ளம். அறிவுமட்டும் மிகுதியாக வளர்ந்துவிடுமாயின் கரையற்ற காட்டுவெள்ளம் போல் எவ்வகை மக்கள் கட்டுப்பாடுகளையும் உடைத்துத் தகர்த்து விடும். அதேபோல் சமயக் கட்டுப்பாடுகள் எங்கு மிகுதியாக உள்ளனவோ அங்கு அறிவு தன் விருப்பம் போல் வளர்ந்து மக்கட்குப் பயன்படுமாறு விளங்கிவிட முடியாது. இக்கூற்றுக்களை ஊன்றியுணர்வார், மனம், அறிவு என்னும் இரண்டு உணர்வுநிலைகளைப் பற்றியும் ஆழ்ந்து கற்றவராக இருத்தல் வேண்டும்.

நம் செந்தமிழ்நாட்டில் பல சமயக் கட்டுப்பாடுகள் இருந்தமையே அறிவுவளர்ச்சிக்குப் பெருத்த தடையேற்பட்டதற்குத் தலையாய காரணமாம். ஆனல் இங்கு மேனாட்டாரைவிஞ்சும் மனவளர்ச்சியும் அறிவுசான்ற மனவளர்ச்சியாக விளங்காமல் ஆமைபோல் அஞ்சியடங்கும் உள்ளத்தின் கோழையுணர்ச்சியாகவே மக்களைக் கட்டுப்படுத்தியிருந்தது.

இத்தகைய பெரிய கட்டுப்பாடுகளில் கிடந்த இத்தமிழகத்து மக்கள், இப்பொழுது மேனாட்டு அறிவு வளர்ச்சிபற்றியறிய முற்படுங்கால், கண்வந்த குருடரென, மனங்கடந்து மகிழ்கின்றனர். கரைபுரண்ட வெள்ளம் தீது நன்று பாராமல் அண்டையில் உள்ள ஊர்களையும், வயல்களையும் சிதைப்பது போல், சமயக் கட்டுப்பாடுகளினின்று தளர்ந்துபோன தமிழ் மக்கள் அறிவுணர்வால் பொங்கிப் பூரித்துத் தீது நன்று பாராதவராய் ஒழுக்க விழுப்பங்களில் தளர்வுறுகின்றனர்,

சமயம் ஒருவன் அறிவை மழுக்குகின்றது. அறிவு ஒருவன் மனக் கட்டுப்பாட்டை அவிழ்க்கின்றது. இவை இரண்டும் ஒன்றுபட்டு இயங்குமானல் அறிவிலும் முன்னேறுது, மனவளர்ச்சியிலும் செயற்கைக் கட்டுப்பாடுகள் சூழக் கோழை மனம் கொண்டும் வாழவேண்டி வரும்.

இவ்வாறு அறிவும் சமயமும் உள்ளத்தின் இரு உணர்ச்சிகளாக மாந்தனிடம் இருந்து ஆட்டிவைக்கின்றன. ஏன் என்று தெரியாமல் எதற்காகவோ அடக்கி மடக்குவது சமயம். ஏன் என்று தெரிந்ததும், தன் விருப்பம்போல் பறந்து திரிய விழைவது அறிவு. இந்த இரண்டு எதிர் நிகழ்ச்சிகளையும் ஒன்றுக்கிச் சமயம் அறிவு இவற்றல் மாந்தர் ஒழுங்கின்மையைச் சரிசெய்துவிடலாம் எனின், அது முன்னையினும் தோல்வியுறும்.

இந்தத் தொல்லைகளை, ஊன்றியாராய்வோர் உலக நாகரிகங்களை உன்னுங்கால் உண்மை உணர்வார். அறிவே தலையாக நின்று ஆட்சிபுரியும் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகளில் மன ஒருமைப்பாடின்றி ஒழுக்கம் குழி தோண்டிப் புதைக்கப்படுவதும், சமய உணர்வே தலையெடுத்திருந்த பண்டைய உரோம், கிரேக்க நாடுகளில் அறிவு படுகுழியில் ஆழ்த்தப்பட்டதும் எண்ணி ஆராயற் பாலன.

இனி இவ்விரு நிலைகளும் இவ்வாறிருக்க மக்கள் ஒழுங்கைக் கட்டுப்படுத்துதல் யாங்ஙன் எனில் கூறுவோம்.

சமயவுணர்வில் வேராக நிற்கும் கட்டுப்பாட்டையும், அறிவுணர்வில் வேராக நிற்கும் தன்விருப்பத்தையும் ஒன்றாக ஆக்கி மக்கட்கு அறிவித்தல் வேண்டும். பண்பாட்டு நெறியில் அவர்தமைப் புகுத்துங்கால் கடுமையான சட்டங்கள் தண்டங்கள் முதலியவற்றால் அடக்கியும், அறிவு நெறியில் அவர் தம்மைப் புகுத்துங்கால் தன் விருப்பத்தால் அவரை ஊக்கியும் வரல்வேண்டும். அஃதாவது கல்வி கற்க விரும்பும் மாணவர் தம்மின் அறிவு போகின்ற வழி அவர் கல்வி கற்க ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். இயற்கை நூலின் மேல் நாட்டங்கொள்வான் ஒருவனை நாட்டைக் காக்கும் ஊர் காவலனாக ஆக்க விடுதலும், மறப்படையில் விருப்பம் உள்ள மறவன் ஒருவனை மருத்துவனாக ஆக்கவிடுதலும் இந்த நாட்டில் உடனே தடுத்து நிறுத்தப்பட வேண்டிய ஒன்று.

இயற்கை முறைக்கல்வி, மனவியலின் அடிப்படையில் அமைவது. நெல்லையும், கம்பையும், கரும்பையும், கோதுமையையும், காப்பிக் கொட்டையையும் ஒரே கழனியில் விதைத்து அறுவடை செய்வதாக, இன்று நம் கல்வி நிலையங்கள் அமைந்திருக்கின்றன. நிலநூல் நாட்டம் உடையான் ஒருவனையும், மன நூல் வேட்கை மிக்கான் ஒருவனையும், வானநூல் விருப்பம் கொள்ளும் ஒருவனையும், பாலியல் நூல் விழையும் ஒருவனையும் ஒன்றாக அமர்த்தி மொகலாய வரலாறு பற்றி விரிவாகப் பேசுவதிலும் கம்ப இராமாயணத்தில் கைகேயி சூழ்வினைப் படலத்தைப் படித்து ஒப்பாரி வைப்பதிலும் என்ன ஒழுங்கிருக்கின்றது? கல்வி முறையில் ஒழுங்கு குறைகின்றது என்பதற்குக் கல்வி நாட்டம் குறைகின்றது என்பதே அடிப்படைக் காரணமாகும். இந்நாட்டத்திற்குக் காரணம் அவர்க்கிருக்கும்

கல்வி முறையேயாம். இவற்றை அறிந்து திருத்தம் செய்யாமல் சோறுண்ணக் கொடுத்தும், உடையுடுத்தக் கொடுத்தும் கல்வி பயிற்றுவது மேலும் மேலும் அவ் வொழுங்கின்மையையே கட்டிக்காப்பது போன்ற ஒரு செயலாகும்,

இனி கல்வித்துறையில் ஓர் ஒழுங்கு கண்டான் ஒருவன் வாழ்வுத்துறையில் தன்னைச் சரி செய்துகொள்வான், தரக்குறை வாக நடப்பானாயின் அவனைத் தட்டியடக்கப் போதிய அரசியற் காப்புமுறைகள் வலிவாக இருத்தல் வேண்டும். செடி முளைத் துக் கிளைப்பதற்கு முன் நாம் கருதவேண்டியன நிலவளமும் எருச்சேர்ப்பும், கதிரவன் ஒளி அமைவும் ஆகும். இவற்றால் மண்டி அடர்ந்து ஒழுங்கற்று வளரும் புதர் போன்ற செடி கொடிகளை நாம் வெட்டி ஒழுங்கு செய்தல்போல் கல்வி வளம் வாய்க்கப் பெற்றும் நிலை மாறிப் போவாரைத்தடுத்து அடக்கல்வேண்டும்.

இவ்வாறு அடிப்படையிலேயே நன்கு அமையாத கல்வி வளத்தால் நாடு அடையப் போகும் நன்மை வேறொன்றுமில்லை. தீமை பலவாகும். இவற்றில் ஒன்று ஒழுங்கின்மை. கல்வி நெருப்பு: அதனை ஒழுங்காகச் செப்பஞ் செய்து கொள்வோமாயின் விளக்காகவும், அடுப்பாகவும் அது பயன்படும். அற்றேல் அது ஊரைச் சுடும் நெருப்பாகவே பயன்பட்டுவிடும் என்பதை அறிஞர் உன்னிப் பார்க்க வேண்டுகின்றோம்.

**நோய் நாடி நோயின் முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்.**

* * * * *

# ஓவிய உழைப்பு

'தென்மொழி' வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் உழைக்க அன்பர்க்கு வேண்டுகோள் விடுத்துள்ளோம். இதனை ஏற்று, அன்பர். திரு. **கண்ணன் அவர்கள்** தென்மொழிக்கு வேண்டிய ஓவியங்கள் அனைத்தையும் அன்பளிப்பாக வரைந்து அருள ஒப்பியுள்ளதை மகிழ்வுடன் அறிவிக்கின்றோம். கலைஞர் **கண்ணன் அவர்களின்** அரிய தொண்டிற்குத் தலை வணங்குகின்றோம்.

— ஆசிரியர்

# கோடை

பச்சை பறந்தெழில் பட்டிட எங்கணும்
பாலை மருவியதால்— துயர்
வேளை நெருங்கியதால்—மரம்
உச்சி முதலடி வேரின் நுனிவரை
வாடி உலர்ந்ததுவே—நலம்
நாடிப் புலம்பியதே!

வாடுஞ் சருகுகள் கூடி யரற்றின
வாழ்வின் முடிவினிலே!—கொலை
ஊழின் பிடியினிலே!—காற்று
தேடி யலைத்திட மெல்லிய பூங்கொடி
தேம்பி அழுதது காண்! —மனங்
கூம்பி விழுந்ததுகாண்!

முட்கள் பரவின; மூடின புல்வெளி!
மூங்கில் எரிந்ததுவே! — சோலை
ஏங்கிக் கரிந்ததுவே! — வானில்
புட்கள் பறந்தில; கூட்டிலே குஞ்சுடன்
போக்கற்று வாடினவே!—வெம்மை
தாக்குற்றுப் பாடிலவே!

வாடை சுழன்றிட ஆறுகள் வற்றின!
வான்மலை ஏரற்றதே! இளம்
மான்விழி சோர்வுற்றதே!—எங்கும்
கோடையின் ஆட்சியைக் கூகை முழக்கிடக்
குன்றிக் குலைந்ததடா!—நெஞ்சம்
குன்றிக் குலைந்ததடா!

— தமிழன்பன் —

---

## திருத்தம்

இந்த இதழில் வேறுபக்கத்தில் வெளியாகியிருக்கும் தென்மொழி உரிமை அறிக்கையில் அச்சக உரிமையாளர் பெயர் திருவாட்டி. தமிழரசி என்றிருப்பதைத் திருவாட்டி செந்தமிழ்ச் செல்வி என்று திருத்திக்கொள்ள வேண்டுகின்றோம்.

(— ஆ. ர்.)

---

# "தென்மொழி" வளர்ச்சிக்கு

'தமிழ்மொழி தனித்தியங்கும்' என்று பேசுவோரும், 'தமிழ் நாட்டில் வடமொழி தலைகாட்டக்கூடாது' என்று கருதுவாரும் தாம் பேசுங்காலும், எழுதுங்காலும் தனித்தமிழில், பிறமொழித் துணையின்றிப் பேசவும் எழுதவும் செய்கின்றனரா எனின் வெட்கக்கேடே. இக் கோட்பாடுகளுக்காகவே, தமிழரால் நடத்தப்பெறும், தமிழ்த் தாளிகைகளும் அவ்வாறு தனித்தமிழில் நடத்தப்பெறுவனவாக வில்லை. இந்நிலையைத் **'தென்மொழி'** அடியோடு மாற்றியது. தனித் தமிழிலேயே பாட்டுக்கள் இசைக்கவும், உரைநடை எழுதவும், நாடகங்கள் வரையவும் முடியும் என்று கூறிச்செயல்படுத்தியும் வருகின்றது.

'தனித்தமிழில் எழுதினால் மக்கள் எளிதில் புரிந்து கொள்ளார்' என்று மறுக்கும் அத்தகையோரின் ஆற்றலின்மையைத் **'தென்மொழி'** எடுத்துக்காட்டியது.

தாளிகையுலகிலும், தமிழ் உலகிலும் ஒரு புதுமையை ஏற்படுத்திய பெருமை **தென்மொழி**க்கு உண்டெனில், அதை மறுப்பார் இலர்.

புதுமை விரும்பும் மாணவரும், ஆசிரியரும் இதனைப்போற்றி வரவேற்பதொன்றே நாம் கூறுவதை வலியுறுத்தும்.

தென்மொழியை இருகை நீட்டி வரவேற்பார் தாம் வரைந்துள்ள மடல்களை அவ்வாறே வெளியிடின் நூற்றுக்கணக்கான பக்கங்களைக் கொண்ட ஒரு கருத்து நூலாக அது திகழும்.

இத்தகைய சிறப்பு நலன்களால் மட்டும் ஒரு தாளிகை வளர்ந்துவிடுவதில்லை என்பதை நாம் இதனைத்தொடங்கி நான்கைந்து திங்கட்குப்பின் உணரவேண்டுவதாயிற்று.

இதுவரை வெளிவந்த தென்மொழிக்கு எத்தகைய இடர்ப்பாடுகள் இருந்தன என்பதைப் பின்பு அறிவிக்கின்றோம். கடந்தகால நிகழ்ச்சிகளால் நாம் அறிவது இது:—

தென்மொழிக்கு ஒரு தனி அச்சகம் ஏற்பட்டாலொழிய, இது மேலும் சிறப்புற வழியில்லை.

ஆதலின் தென்மொழிக்கு உறுப்பினரா யிருப்போர் ஒவ்வொருவரும் தம்வழியில் ஒவ்வோர் உறுப்பினரைச் சேர்த்துவைத்து இதன் அச்சக வளர்ச்சிக்கு உதவுமாறு வேண்டுகின்றோம்.

இதன்பால் அன்புகொண்ட தமிழன்பர் தம்மால் இயன்ற பொருளுதவிகளைச் செய்யுமாறு கைகூப்புகின்றோம்.

இதன் வளர்ச்சியில் பங்குகொண்ட விற்பனையாளர் மேலும் பல படிகளை விற்றுத் தென்மொழி வளர உதவுமாறு பணிகின்றோம்.

ஆசிரியராயிருப்போர் தம் மாணவர்க்கும், நண்பர்க்கும் தென்மொழி பற்றிக்கூறி அன்னாரையும் இதனை வாங்கிப் படிக்கச் செய்யுமாறு தலை தாழ்த்துகின்றோம்.

'தென்மொழி' பலராலும் வரவேற்கப்படுகின்றது என்று நாம் கூறுவதைத் தமிழன்பர் மெய்ப்பிப்பர் என்று நம்புகின்றோம்.

தமிழுக்கு உயிர்தரவேண்டாம்; உழைப்பையாவது நல்க வேண்டாமா? உங்கள் முயற்சி வெற்றியளிக்கட்டும்.

அன்பன்

**பெருஞ்சித்திரன்.**

# மனப் புரட்சி

கரும்பாம்சுவை அன்பால் எனைக்
கவர்ந்தீர், உயிர் அத்தான்!
இரும்பாகிய உள்ளம்கனன்
றெனைவிட்டெழுந் தேகித்
துரும்பாகியே சுழலும் உடல்
துயர்மேவிட வாடும்!
சுரும்பாகியே பறப்பீர்; இலை
பறக்கும் உயிர், அத்தான்!
எங்கும் புகழ் தங்குந்தமிழ்
இன்பம்தரக் காணேன்;
பொங்கும் எழில் தங்கும் அணி
பொலிவாம் எனப் பூணேன்;
சங்கின் உரு இங்கே! ஒளி
சேர்க்கும் மதி அங்கே!
இங்கென் உடல்! அங்கென் உயிர்!
இணைதல் இனி எங்கே?
உள்ளம்துயர் வெள்ளம்கொளும்
ஊற்றின் பெரு காறோ?
கள்ளம் எனில் கொண்மோ உளம்
காதல் தரும் பேற்றை!
எள்ளும் குயில்; இகழும் மயில்;
எல்லாம் எனைக் கொல்லும்!
துள்ளும் சிற கார்க்கும் எழில்
தோற்றத்துமைக் காண!
வானின் ஒளி வையம்பெற,
வாழும் உயிர் கோடி!
தேனின் சுவை காண, மலர்
திளைக்கும், சுரும் பாடி
நானின்றிதை நவின்றேன்எனில்
நெஞ்சின்நிலை சொன்னேன்;
ஊனின்றுயிர் நீங்காவணம்
ஒருநாட்கென காப்பேன்!

# ஓவியக் கலை

[ஓவிய வல்லுநர் **ஆச்சாரியா நந்தலால்போசு** அவர் எழுதிய நூற்சுருக்கம்]

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஓவியம் வரைவோர் அதன்மேல் விருப்பம் வையாவிடில் எவ்வித பயனும் அடையமாட்டார். விருப்பத்தோடு பயிற்சியில் பொறுமையும் வேண்டும். நாளும் விடாத பயிற்சி உண்மை ஓவியருக்கு மிகவும் தேவை. ஓவியருக்கு உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் நண்பரே. மரத்தைக்கண்டும், கதவைக்கண்டும் அவர் விரும்பி நட்பாடத் தொடங்குகிறார். பல நாட்களாகப் பார்த்த பொருள் என்பதற்காக அவர் ஒரு பொருள்மேல் வெறுப் படைவதுமில்லை; முன்னர் பார்த்திராத புதியபொருள் என்பதற் காக மயங்குவதுமில்லை.

**ஓவியப்பயன்**

சப்பானிய கலையறிஞர், ஒக்கக்கூரா என்பவர் இயற்கை, மரபு தன்மை இம்மூன்றிலுலேயே முழுமையான கலைவளர்ச்சி ஏற்படும் என்று குறிப்பிடுகிறார். நாள்தோறும் இடையறாத பயிற்சியின் பயனாக மனம் நிறைகுடமாகிறது. நிறைகுடத்தைச் சிறிது அசைத்தாலும் தண்ணீர் ததும்பிக் கொட்டும்; அங்ஙனமே யாதானுமொரு காரணத்தால் உள் ளம் சிறிது அசைவுற்றால் அதன் சுவை உணர்வும், உள் ளுணர்வும் ததும்பி ஓவியமாகவும், கல்லுருவமாகவும், ஆட லாகவும், பாடலாகவும், இசையாகவும் வழிந்து இன்பம் விளைவிக்கும்.

கலையைப் பொருத்தமட்டில் நம்பிக்கையோடும் மகிழ்ச்சி யோடும் வேலையைத்தொடங்கி சிறிதுபோதில் ஒன்றுமே கை கூடவில்லையே என்று மனந்தளரலாம். ஆனால், உண்மையில் வெற்றிபெறும் காலம் நெடுந்தொலைவில் இராது.

காவிரியாற்றில் நீரின் போக்கோடு அசைந்து மிதந்து கொண்டுபோகும் மலர்கள், இலைகள், செடிகொடிகள், இவற் றைப் போல் எளியமாந்தர் வாழ்வின் நீரோட்டத்தோடு இயைந்து போகின்றனர். ஆனால் கலைஞரோ அதே நீரில்

தாம் விரும்பியவாறு வெள்ளத்தின் எதிர்முகமாகவும், கீழ் முகமாகவும், நீந்தி விளையாடுகின்ற மீன்களைப்போல வாழ் வின் எப்பகுதியிலும் புகுந்து சுவைக்கின்றனர்.

ஒழுங்கற்ற சொரசொரப்பான ஒரு சிறுகல்லைக் கண்டு மற் றோர் வெறுங்கல் என்று ஒதுங்கிச் செல்வர். ஆனால் உண்மைக் கலைஞர் ஒருவர் தம் உள்ள உணர்வுகளால் உந்தப்பட்டு அக்கல் லின் மேற்பகுதியைச் சிறிது தேய்த்தும், குறைத்தும், செதுக்கி யும் விடுவாரானால், அது ஒரு குரங்கைப்போலும், அல்லது ஒரு கிழவியைப்போலும், தோற்றமளித்து மற்றவர் உள்ளத்தில் வியப் பையும் விருப்பையும் ஊட்டி அதன் கலையுணர்வில் மூழ்கடிக்க லாம். முன்பிருந்த வெறுங்கல் ஒரு சுவையும் இன்றிக் கிடந்தது. கலையால் போர்த்தப்பெற்றபின், அது கண்கள்வழி உள்ளத்தில் ஒரு கிளர்ச்சியை எழுப்பிச் சுவையை உண்டுபண்ணுகின்றது.

தலைமேல் மிதந்துபோகும் ஒரு முகிற்கூட்டத்தைக் கண் டதும் ஒரு உண்மைக் கலைஞன் மிகவும் மகிழ்ந்து சுவைக்கத் தொடங்குகின்றான். அவன் உள்ளம் அம் முகிற்கூட்டத்தோடு ஒன்றிப் போகின்றது. அம் முகிற் கூட்டம் அவன் உள்ளத்தை ஏன் இவ்வாறு தொடல்வேண்டும்? அவன் உணர்ச்சியை ஏன் இவ்வாறு அசைக்கவேண்டும்? இவற்றிற்குப் பொருட்டுக்கள் என்ன தெரியுமா? ஒரே அழகுப்பொருளின் ஒரே உணர்வு இரு கூறாகப் பிரிந்து இரு முனைகளில் நிற்கின்றன. ஒரு முனை அந்த முகிற்கூட்டம். இன்னொருமுனை இந்தக் கலைஞன். ஒரே அழ குக் குவியலில் இருந்து பிரிந்த இரு கூறுகள் ஒன்றையொன்று எதிர்பட்டு நிற்கையில், உணர்வென்னும் பெருநிலையில் மூழ்குகின் றன. கலைஞனின் உள்ளக்கூட்டில் அடைபட்டுக் கிடக்கும் உணர்வு எனும் பறவை, வேறு தன்போன்ற இனப்பறவைகளா கிய அழகு இனங்களைக் காண்கையில் அவனையறியாமல் கண்கள் என்ற பலகணிகளின் வாயிலில் வந்து அவற்றைக்கண்டு ஏங்கு கின்றது. அவற்றின் அசைவில் ஒன்றுகின்றது. அப்படி ஒன்றி வகைவகையான இன்பத்தில் தானும் மூழ்கி, அக்கலைஞனையும் மூழ்கவைக்கின்றது. வெறிகொண்டு அவனையும் இழுத்துக் கொண்டு பறக்கவிரும்பி எம்பி எம்பிக் குதிக்கின்றது. அவனை இவ்வுலகத்திலிருந்து தூக்கிக்கொண்டு பறக்கமாட்டாமல் மீண் டும் தரையிலேயே விழுகின்றது—மீண்டும் பறப்பதும் தரையில் வீழ்வதுமாக அவன், முடிவுகாலம் வரையில் அது அவனை அலைக் கழிக்கின்றது. இத்தகைய உணர்வே சுவை. இந்தச் சுவையில் ஒன்றுபட்டதே கலை. கலையே சுவை, சுவையே கலை, அழகே கலைஞன்—அவனே அழகு—அவனே சுவை! எல்லாம் கலைக் கண்ணோட்டத்தில் சுவைப்பொருள்களே!

○ ○ ○

# பெயர் தெரியாப் புலவர்க்குப் பெயர் கொடுத்த பாக்கள்.

[காட்டுலிங்கன்]

முன்னைய இசைகளில் தோழர். திரு. வெண்ணெய்வேலன் அவர்கள் எழுதிவந்த பெயர் தெரியாப் புலவர்க்குப் பெயர் கொடுத்த பாக்களைப் படித்தோம். அவ்விலக்கியக் கட்டுரையின்கண் குறிப்பாகவும், சிறப்பாகவும் குறுந்தொகை இடம் பெற்று விளக்கி நின்றது.

குறுந்தொகையுள் பெயர் தெரியாப் புலவர்க்குப் பெயர் கொடுத்த பாக்களைக் காண்போர் பதினெண்மர் பூத்த புன்முறுவலின் சாயலைப் பதினெண் ஒண்மணிகள் ஒளிவீச்சாகக் காண்டல் கண்கூடு. விட்டகுதிரையார், மீனெறி தூண்டிலார், செம்புலப் பெயல் நீரார், நெடுவெண்ணிலவினார், அணிலாடு முன்றிலார், ஓரேருழவர், ஓரிற்'பிச்சை'யார் குப்பைக்கோழியார், கல்பொரு சிறுநுரையார் ஆகிய ஒன்பதின்மருடன் தன் கட்டுரையை அத் தோழர் முடித்துக்கொண்டார். அதன்மேல் தொடர்வது இக் கட்டுரை.

**குறியிறையார்:-**

ஆடிப்பழகிய அன்பு, கூடிப் பழகும் அன்பாயிற்று. அன்பு காழ்ப்பேறிக் காதலாயிற்று. காதற் கனிகளை மாந்தி மாந்தி உண்டு களித்தனர் மலைச்சாரலில் இளங்காதலர் இருவர். ஆடியும், கூடியும் பின்னிய அவ்விளங் காதற்பிணைகள் ஒருகால் பிரிந்தன. அவ்விரு பிணைகளின் இடையில் கறங்கு வெள்ளருவியும், மலையும், காடும், கான்விலங்கும், தினைப்புனமும் வாடிநின்றன. பிரிவாற்றுமையால் காதலி வருந்தி நின்றுள்.

புறக்கடைக்குச் செல்வாள்; எட்டிப்பார்ப்பாள்; கண் எட்டும் வரையில் காதலன் உருவைக் காணவில்லை. ஏமாற்றம்தான்! "யானைக்குட்டி தன் சிறுபருவத்தில் குறத்திமகள் ஈன்ற சிறுருடன் குறுகிய இறப்பையை (தாழ்ந்த கூரையை) உடைய குடில்களின் அண்மையில் வந்து விளையாடுகிறது. ஆனுல், அது வளர்ச்சிப் பெற்றதும் அம்மக்கள்தம் குடிலுக்குச் சேய்மையில் வாழ்ந்தல்லவா தினைப்புனத்தையும் அழிக்கிறது! இது என்ன கொடுமை? இதுபோல் அன்று இனிக்க இனிக்க நெருங்கிப் பேசியவர், இன்று எவ்வளவு தொலைவில் நின்று கொடுமை செய்கின்றுர்" என்று கவல்கின்றுள்.

"முழந்தாழ இரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமகள் ஈன்ற
குறி இறைப் புதல்வரோடு மறுவந்(து) ஓடி
முன்நாள் இனிய(து) ஆகி பின்நாள்
அவர்தினைப் புனம்மேய்ந் தாங்கு
பகையா கின்(று) அவர் நகைவிளை யாட்டே."

(குறுந்தொகை)

இப்பாட்டில் அமைந்த 'குறிஇறை' என்ற அருஞ்சொல், குறிஇறை நறவுமலி பாக்கம் எனவும்; குறி இறை குறமகள் எனவும்; குறிஇறை 'புதல்வர்' எனவும், குறி இறை மறுவந்து ஓடி எனவும் பொருள் சிறக்க இயைந்து, குறிய இறைப்பையை உடைய குடில் என உணர்த்தி எழில்பெற நின்றது. "தாழை முடித்துத் தருப்பைவேய்ந்த, குறிஇறைக் குரம்பை" என இதே பொருளில் வரும் பெரும்பாணாற்றுப்படை (264-265) அடிகளை ஈண்டு ஆராயற்பாலது. எனவே, இடமறிந்து எழில் பொலிய இவ்வருஞ்சொல்லை ஆண்ட இப் பெயர்தெரியாப் புலவர்க்குக் குறுந்தொகை கொடுத்தபெயர் 'குறிஇறையார்' என்பது பொருத்தமல்லவா?

**பதடிவைகலார்**

பொருளீட்டிக் கொணர்ந்த பெருஞ் செல்வத்துடன் வீடு நோக்கித் தலைவன் பீடுநடை போட்டான். "பாணர் வதியும் மலைகளில் இருந்து எழுகின்ற பண்ணிசை தென்றலில் கலந்து வான்வெளியில் உலவி, மண்மீது தவழ்கிறது. புதுமழை பெய்த தால் நிலம் 'பச்சைப் பசேல்' என்று கண்கொள்ளாக் காட்சியாக விளங்குகின்றது. காடெல்லாம் பூக்காடாய் மாறிவிட்டது. முகையவிழ்ந்து முல்லை பூத்துச் சிரிக்கிறது. நறுமண நாற்றம் எங்கும் கமழ்கிறது. எங்கும் இன்பப் பொலிவு! முல்லைமலர் தாது நாறும் நறுநுதலி! இத்தகைய இன்பச்சூழலில் உன்னை அணைத்தவாறு துஞ்சிக்கிடக்கும் நாளன்றோ வாழ்நாளாகும்.பிற வாழ்க்கையெல்லாம் வாளை வீணாக்கும் வெற்று வாழ்க்கையே! — பதடி வைகலே!" என்று அவன் அவளிடம் கூறி உள்ளம் பொங்குகிறான்.

> "எல்லாம் எவனோ? பதடி வைகல்
> பாணர் படுமலை பண்ணிய எழாலின்
> வானத்(து) அஞ்சுவர நல்லிசை வீழ
> பெய்த புலத்துப் பூத்த முல்லைப்
> பசிமுகைத் தாது நாறும் நறுநுதல்
> அரிவை தோள் அணைத் துஞ்சிக்
> கழிந்த நாள்இவண் வாழும் நாளே"

என்ற இப்பாடலில் 'பதடி வைகல்' என்ற அருஞ்சொல் — கொழுத்த நெல்மணிபோல் காட்சியளிக்கிறது. 'பதடி வைகல்' என்பது வாளை வீணாக்கும் வாழ்க்கையை உணர்த்திற்று. பதடி என்பது உள்ளீடற்ற நெல்லெனப் பெற்றாம். ஈண்டு சுவை யற்ற வாழ்க்கையை விளக்கி நின்றது. பக்குவம் அறிந்து 'பதடி வைக'ல் என்று கூறிய புலவரை 'பதடி வைகலார்' — என்று அழைக்கலாமன்றோ?

**கங்குல் வெள்ளத்தார்**

தலைவன், தலைவியைப் பிரிந்து 'விரைவில் வருகிறேன்' என்று சொல்லிப்போந்தான். தலைவி, வீட்டில் அடைபட்ட கூண்டுக்கிளிபோல் ஆனாள்; தலைவன் வரவை நோக்கி நோக்கி நிலைகுலைந்தாள்; தலைவன் சென்ற போக்கின் வழிமேல் விழி வைத்தாள்; தலைவன் தலையே தென்படவில்லை! பல்கதிர் பரிதி தன் வெங்கதிரால் சுட்டெரித்தான். அவள் அதையும் பொருட்படுத்தாமல் வீட்டிற்கும் வாயிலுக்கும் வந்து வந்து மீண்டு கொண்டிருந்தாள். தலைவன் வரவே இல்லை! வாடாமலர் வாடியது. வளை கழன்றது. கண் மங்கியது. பசலை படர்ந்தது. கொடுமைகள் அனைத்தும் கூறு போட்டன அவளை! தோழி வந்தாள். வில்லுமிழ் கணைபோல் வினா தொடுத்தாள் தலைவி. மாற்றுமொழி கூறித் தேற்றுதல் செய்தாள். துயர் ஆற்றாத் தலைவி, தோழியிடம் கூறுகிறாள்; "தோழி! பகல் வந்தது; பகலவன் வந்தான்; வெங்கதிரால் சுட்டெரித்தான்; மறைந்தான்; வெம்மை தணிந்தது. முல்லை மலர்ந்தது; துயரம் முட்டிக்கொண்டுவந்தது. கையறு மாலை வந்தது! அந்தோ! வாழி—தோழி! இவற்றையெல்லாம் எப்படியோ உயிரைப் பிடித்துக்கொண்டு நீந்திவிட்டேன். நீந்திப் பயனென்னை? இதோ, இரவு வருகிறதே! அதையெப்படி நீந்துவேனடி! முந்நீர்ப் பரப்பினும் விரிந்ததல்லவா இக் கங்குல் (இரவு) வெள்ளம்!".

> **"எல்லை கழிய முல்லை மலர**
> **கதிர் சினந் தணிந்த கையறு மாலை,**
> **உயிர்வரம் பாக நீந்தினம் ஆயின்,**
> **எவன்கொல்? வாழி—தோழி!**
> **கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே!"**

என்று இக் குறுந்தொகைச் செய்யுள் அடியிற் பயின்றுவரும் '**கங்குல் வெள்ளம்**' என்ற அருஞ்சொற்றொடரால், உவமையை உருவகமாக்கிக், கங்குலையும் வெள்ளத்தையும் பிரிக்காத — பிரிக்க முடியாத ஒன்றாய் ஆக்கிச், சிறப்பு செய்த இப் (பெயர் தெரியாப்) புலவரின் திறனே, திறன்! அதனாலன்றோ இப் புலவர் '**கங்குல் வெள்ளத்தார்**' என்ற பெயர் பெற்றார்.

**கயமனார்:**

"தலைவ! தோழி (தலைவி) நின் பிரிவால் மிக வருத்தம் அடைகிறாள். ஆனால் அதை வெளிப்படுத்த அஞ்சுகிறாள்; நாணுகிறாள்; தன் உள்ளத்துள்ளேயே வைத்துப் புழுங்கிக் கொண்டிருக்கிறாள். அதனால் அவள் உடல் வாடிவிட்டது.

பூச்சூடித் தலைமுடிக்கக் கொணர்ந்த பூவை மணம் செல்லாது மூடுபூக் குடலையில் (மடைமாண் செப்பில்) காத்தும் சூடாத நிலை வாடுதல் போலல்லவா வாடி வதங்கிவிட்டாள்! அதோ பார்! கடலடுத்து ஒரு பெரிய கழி. மீன்களையுடைய அவ்வுப்பங் கழியில் புனலாடுவோரைப்பார்! மூழ்கி எழும் பெண்களின் கண்களைப்பார்!.........என்ன...??? ஓதம் (வெள்ளம்) மல்குதோறும் இதழ் குவித்து ஓதம் வற்றுந்தோறும் மலரும் நீல (நெய்தல்) மலரைப்போல் இருக்கிறதா? ஆம்! ஆம்! மகளிர் (குலமகள்—தலைவி) கண்ணுக்கும், நெய்தற் (பொதுமகள்—பரத்தி) கண்ணுக்கும் உனக்கு வேறுபாடே தோன்றவில்லை. இரண்டும் ஒன்றெனவ அல்லவா மயக்கமடைகிறாய்! உன் சொல்லே உன் செயலைக் காட்டிக்கொடுத்துவிடுகிறதே! அத்தண்ணந் துறைவ! கண்ணைக் கண்ணெனப்பேணுக! வீட்டிற்கு நேராகச் செல்! ஏன் தயங்குகிறாய்? அவள் இப்போது அறிவு முதிர்ச்சிப் பெற்றுவிட்டாள். (இளமை முதிர்ச்சிப் பெறவில்லை!) நின் குற்றம் பொறுத்து உரையாடுவாள். என் தாயை (செவிலியை)ப் போலல்லவா, மாயோள் இளையோள் ஆயினும் அறிந்து ஒழுகும் வன்மை பெற்றுவிட்டாள். அதனால், செல்! செல்! விரைந்து செல்!'':

> ''யாயா கியளே! மாஅ யோளே!
> மடைமாண் செப்பிற் றமிய வைகிய,
> பொய்யாப் பூவின் மெய்சா யினளே!
> பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
> இனமீ னிருங்கழி யோத மல்குதொறும்
> கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்,
> தண்ணந் துறைவன் கொடுமை
> நம்மு னணிக் கரப்பா டும்மே''

கண்டு வரும் ''பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல், இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும், கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்'' எனும் அடிகள் பயில்தொறும் நயம் விளக்கும் பெற்றியன. [பாசடை—பசிய இலை; நிவந்த—உயர்ந்த; கணைக்கால்—திரட்சியுடைய தண்டு; நெய்தல்—நீலமலர்; கயம்—ஆழம் ('கயமேயாழம்' என்பது சேந்தன் றிவாகரம்); மான—வினைப்பால் உவமம் (''அன்ன, ஆங்கு, மான—வினைப்பாலுவமம்''- என்றார் பேராசிரியர்—தொல்காப்பியம், உவ, 12.)]

இவ்வாறு இப்பெயர் தெரியாப் புலவர் கயத்தை நயமுடன் விளக்கியதால் 'கயமனார்' என்னும் பெயர்பெற்றார். (இவரால் பாடப்பெற்ற பாக்கள் குறுந்தொகையில் 9, 356, 378, 398 உம், புறநானூறு 254 உம் காணப்படுகின்றன.)

(—தொடரும்)

# குழந்தை.

சுருண்டகுழல் நீலச், சுடர்வடிவின் கண்கள்
உருண்டமுகம், மென்பளிங்குக் கன்னம்,—திருந்தமையாப்
பச்சிளங் கைகால், தீம் பைங்குதலை ஆம்பல்வாய்!
உச்சி யழகின் உரு!

தத்தி நடக்கும்; தளிர்க்கை அசைத்தழைக்கும்
முத்துச் சிறுபல் முறுவலிக்கும்—கொத்தவருங்
கிள்ளைபோல் தோளிற் கிளர்ந்தபடி தாவிவரும்;
உள்ளங் கவர்பொன் உரு!

அப்பாவின் தோளிருக்கும்! அன்னைமுகம் கண்டுவிடில்
தப்பாமற் கைவிரித்துத் தாவிவரும்;—எப்போதும்
நில்லாமல் வீடெங்கும் நீந்தித் திரிந்துவரும்;
பொல்லாத பிள்ளை அது!

குருவியினைக் கண்டாற் குதிக்கும்; பிடித்துத்
தருகவெனக் காட்டித் தவிக்கும்—குருவினைப்
பாவையொன்றை காட்டிற் பழவாய் திறந்துசெந்
நாவையசைத் தேயழைக்கும் நன்கு!

தண்ணீரைப் போய்அளைக்கும், தட்டைப் பிடித்திழுக்கும்;
மண்ணையள்ளிப் பூசி மகிழ்ந்திருக்கும்—கண்ணுலே
கண்டதெலாம் ஆயுப் களைப்பறவே தூங்கிவிடும்;
மண்டுமெழிற் பொன்னின் மணி!

குழலினிமை வேண்டார்; கொழுமமிழ்தங் கொள்ளார்;
மழலையினில் ஒன்றே மகிழ்வார்—குழைகின்ற
அன்னைக்கும் தந்தைக்கும் ஆவிப் பொருள்ஒன்றாய்
என்றைக்கும் வாழும் இது!

ம. இலெனின் தங்கப்பா.
பி.ஏ; பி.டி

# சாதிகள் இல்லையடி பாப்பா!

— மாரி. அறவாழி —

பலகணிக்கருகே உட்கார்ந்திருந்தேன். எதிரே ஒரு பள்ளிக்கூடம். இடைவேளை நேரம். சிறுவரும் சிறுமியரும் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தனர். பாட்டும் சிரிப்பும் விண்ணை எட்டின.

"டங் டங்"கென ஒலித்தது பள்ளிமணி. பறவைகள் கூடுகளுக்குள் ஓடி அடைந்துகொண்டன.

ஓய்வு அறையிலிருந்து வெளிப்பட்ட ஆசிரியைகள் தங்கட்குரிய வகுப்புக்களை நோக்கி அன்ன நடையிட்டனர்.

ஒரு வகுப்பறை என் கருத்தைக் கவர்ந்தது.

ஆசிரியை வகுப்பறைக்குள் நுழைந்தவுடன், குழந்தைகள் பணிவுடன் எழுந்து நின்று "வணக்கம் அம்மா" என்று குரல் எழுப்பினர்.

குழந்தைகளின் நாவில் பட்டு எதிரொலித்த தமிழோசை என்னைப் பூரிக்கச் செய்தது.

ஆசிரியை நாற்காலியில் உட்கார்ந்தார். பாட்டு வகுப்பு தொடங்கியது.

அவர் முதலில் பாடினார். யாழ்போன்றிருந்தது குரல்; அவரைத் தொடர்ந்து குழந்தைகள் பாடினர்; யாழோசையின் ஒலிச் சிதறலை போன்று இருந்தது அவர்தம் முற்றாத மழலைக்குரல்.

மெய்ம்மறந்து கண்களை மூடிக்கொண்டு இன்பத்தில் ஆழ்ந்துகிடந்தேன்.

பாரதி பாட்டு ஒலித்தது.

"சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் தீது..."

கருத்து நெஞ்சை உருக்கியது. கண்ணீர் விட்டேன்.

அப்பொழுது வகுப்பின் கடைசியில் உட்கார்ந்திருந்த இரு சிறுவர் எழுந்தனர். அவர்தம் உடலும், உடைகளும் தலையும் அவர்கள் ஏழ்மைக் குடியில் பிறந்தவர் என்பதைப் பறைசாற்றின.

ஆசிரியை அவரை விளித்து,

"என்ன வேண்டும்?" என்று கேட்டார்;

சிறுவர் விடை கூறினர்.

"வேட்கையாக இருக்கிறது! தண்ணீர் குடிக்க வேண்டும் அம்மா" ஆசிரியை உத்தரவு தந்தார்.

"சரி! போய்க் குடித்துவிட்டு வாருங்கள் . ."

சிறுவர் குழாயடிக்கு ஓடினர். பத்து நொடிகளில் திரும்பி வந்தனர். தமது இடங்களில் உட்கார்ந்து கொண்டனர்.

சிறிது நேரம் கழிந்தது. ஆசிரியை, ஒரு மாணவச் சிறுமியை அழைத்தார், சிறுமி அவரருகே சென்றாள்.

"பூங்குழலி! குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டும்! இந்தச் செம்பில் போய்ப் பிடித்துவா.."

ஆசிரியை சிறுமியிடம் இவ்வாறு கூறி ஒரு செம்பையும் கையில் கொடுத்தார்.

சிறுமி செம்புடன் ஓடினாள். கண்ணிமைப் பொழுதில் நிறை செம்புடன் திரும்பிவந்தாள். ஆசிரியை முன் நீட்டினாள்.

செம்பை வாங்கிய ஆசிரியை, தண்ணீர் குடிப்பதற்காக அதை மேலே உயர்த்தினார். என்ன நினைவு வந்ததோ தயங்கினார், தண்ணீர் பிடித்துவந்த சிறுமியை மீண்டும் அருகில் அழைத்துக் கேட்டார்.

குழாயில்தானே பிடித்துவந்தாய்?"

சிறுமி விடை கூறினாள். 'ஆமாம் அம்மா!'

"குழாயை நன்றாகக் கழுவினாயா?" ஆசிரியை அதட்டினார்.

சிறுமி அச்சத்துடன் பதில் தந்தாள் "இல்லை அம்மா..."

ஆசிரியை சீறி விழுந்தார்,

"ஏண்டி மடச்சி! கொஞ்சமாவது அறிவிருக்கிறதா உனக்கு? குப்பனும், சுப்பனும், உனக்குமுன்னால் அந்தக்குழாயில் தண்ணீர் குடித்தனரே! அவர் அதைத் தீண்டியிருப்பாரே என்று உனக்குப்படவில்லையா? சொரணை இருந்திருந்தால் குழாயைக் கழுவாமல் பிடித்துவந்திருப்பாயா...... சரி .. இந்தா ... இதைக் கொட்டிவிட்டு இன்னொரு செம்பு பிடித்துவா .. ஓடு... பிடிக்குமுன்னர் குழாயை நன்றாகக் கழுவிவிட்டுப் பிடி......"

சிறுமி தண்ணீரைக் கொட்டிவிட்டு மீண்டும் குழாயடிக்கு ஓடினாள்.

ஆசிரியை, விட்டுப்போன இடத்திலிருந்து பாடலைத் தொடர்ந்தார், "...எங்கே பாடுங்கள் பார்ப்போம்......

சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் தீது
நீதி, உயர்ந்தமதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்"

○ ○ ○

முன்னிதழ்த் தொடர்ச்சி:

# அறுபருவத் திருக்கூத்து.

(*கார்* தொடர்ச்சி.)

**பாட்டுச் சுருக்கம்;**

கருமை மண்டிய முகில்போன்ற குழலையும், பிறைநிலா போல் குற்றமற்ற நெற்றியையும், அணிகள் தொங்கும் செவிகளையும், குனிந்த வில்போன்ற புருவங்களையும், கலை பொங்கி வழியும் கண்களையும், தென்றல் போன்ற குளிர்ந்த மெல்லிய மூச்சுக்காற்றை இயக்கும் துளைகளையுடைய மூக்கையும், தேன் விளைந்து கசிகின்ற இரண்டு இதழ்களையும், முத்துக்களின் வரிசை போன்ற பற்களையும், அழகிய முழுமணிபோல் அமைந்த தாடையையும், மூங்கில் போன்ற தோளையும், அழகிய காந்தள் மலர்போல் சிவந்த கைகளையும், பிழையில்லாத ஓவியக்கலை நுட்பங்கள் அடங்கிப் பொங்கிய மார்பகங்களையும், மெல்லிய ஈர்க்குப்போன்ற இடையையும், நலிவில்லாத இசையோட்டத்தைப் பண்தவறாமல் பயின்றவாறு நடக்கின்ற அழகிய நாடகத்தின் உறுப்பாகிய கால்களையும், அக்கால்களிலிருந்தவாறு ஒலியெழுப்பும் சிலம்புகளைப் பொருந்திய செம்மைசான்ற காலடிகளையும், கூரிய நகங்களையும் உடைய பருவம் அணைந்த பெண்டிர், ஓயாமற் பெய்கின்ற பெருமழைக்கு அஞ்சுகின்றனர். அவர் கழுத்தில் மனைமகளுக்கு அணியாகிய மணவணி ஒன்றே கிடக்கின்றது. அதுவன்றி மற்ற அணிகள் பூணுவதை ஒதுக்கினர்.

தேர்ந்தெடுத்த செம்பட்டு உடைகளைத் தலையிலிருந்து கால்வரையிற் போர்த்திருக்கின்றனர். வெளியே போவதாலும், வருவதாலும் அவர்தம் உடைகள் உடலோடு ஒட்டுதலால், அவர்தம் உடல் அழகு வெளிப்படுகின்றது. அவர் குழல்களைத் தளர்வாகக் கட்டியிருக்கின்றனர். அவற்றில் ஓரிரண்டு தாழை மலர்களையும், மகிழ மலர்களையும் சூடியிருக்கின்றனர். அவர்தம் கண்கள் மைதீட்டப்பெறாமல் இயற்கையழகோடு விளங்குகின்றன. அகிற் கலவையைப் பூசிப் பழகிய அவர் மார்பகங்கள் அக்குழம்புப் பூச்சை மறந்திருக்கின்றன. அவர்தம் காலடிகள் பொன்னிறமுடைய பவளக்குறிஞ்சி (மருதோன்றி) இலைகளின் குளிர்ந்த சாற்றைப் பூசுவதை வெறுத்திருக்கின்றன.

வரிவரியாக ஒன்று சேர்ந்து பொன்கருப்பு வண்ணத்தில் உள்ள மென் மயிர்கள் முளைத்த முன்கைகளையுடைய அப் பெண்டிர் அழகிய வளையல்களை விழ்த்தினர். உடல் ஈரம் போவதற்கு எரியின் பக்கலில் அமர்ந்து உடலை இளஞ்சூடு ஏற்றிக் களிக்கின்றனர்.

நனைந்திருக்கின்ற சுவர்களையுடைய வீடுதோறும் பலவகை நன்வேர்களையிட்டுக் காய்ச்சிப் புகையெழுப்புகின்றனர். நல்ல சுவை பொருந்திய உணவைச் சூடு ஆறுமலே, தணல் எழுப்பும் தியின் அருகில் அமர்ந்து உண்கின்றனர். ஈண்டு அவர் கொழு விய தயிரை விரும்புவதிலர்; குளிர்ந்த நீரையும் அருந்துவதிலர்; அவர் உணவில் சேர்கின்ற நாட்பட்டுச் சுவைபெருகிய தேனையும் ஒதுக்கிவிடுகின்றனர். ஆவின்பாலை மிகுதியும் அருந்துகின்றனர்.

உணவு முடிந்தபின்னை, திறந்துள்ள மாடங்களைத் தொங்கு திரை கட்டிவாடைக் காற்றைத் தடுக்கின்றனர் வெளியே சென்ற ஆடவர் திரும்பாவுழி, ஊடல் எண்ணம் மிகுந்து உள்ளத்தில் எழுகின்ற நல்ல காதல் உணர்வை அடக்குகின்றனர்.

அயிற்றாளும் அகிற்றாளும் புகைத்தலால் சூடு மண்டிய தனித்த படுக்கை அறையில் கணவனன்றித் தனியாகப் புகுந்து, நீண்டு உயர்ந்த கதவின் உட்புறத் தாழை முடுக்குகின்றனர். குடைந்து அழகு செய்யப்பெற்றக், கால்களையுடைய கட்டில்மீது ஏறிப் படுக்கின்றனர். கொழுநர் வீடு வராததால் அவர் கண் கள் வேலெனக் கூர்மையான பார்வை கக்கி நிற்கின்றன. அவர் வரும் வழியை மேவி அப்பெண்டிர்தம் விழிகள் நிற்கின்றன.

இங்ஙனம் தனித்து வருந்தும் இளம்பெண்டிர் தம்மை, ஏறுபோன்ற காளையர் நள்ளிரவில் கதவைத்திறக்க இரந்து வேண்டி உள்ளே புகுகின்றனர். அவர் காலந்தாழ்த்து வருகின் றமைக்குக் கூறுகின்ற காரணங்களை, அணிகள் தொங்கும் செவிய ராகிய அப்பெண்டிர் ஏற்க மறுத்து ஊடுகின்றனர்.

விடாது பெய்கின்ற பெருமழையில், நடுவழியில் தாம் அகப்பட்டுக்கொண்டதையும், அதிலிருந்து மீண்டு வரவும், வந்து மனைவியோடு பொருந்தவும் விருப்பம் இருந்தும், கையில் குடை யில்லாமலிருந்ததால் அவ்வாறு வரமுடியாமற் போனதையும், அம் மழைக்காக ஒதுங்கிய ஒரு வீட்டில் தாம்கண்ட ஒரு பெண்ணை யும், அப் பெண்ணின் மையுண்ட கண்களுக்குத் தாம் இரையா கப் பட்டதையும் முறையாக அப் பெண்டிர்பால் அவ்வாடவர் உரைத்துத் தம்மை மன்னித் தேற்குமாறு இரந்து நிற்கின்றனர். வராமையால் சினந்தும், வராமைக்குக் கூறிய காரணங்களாற் கனன்றும் அப்பெண்டிர் மேலும் ஊடுகின்றனர்,

அவ்வூடல் நேரத்தில் வல்லிடி ஒன்று முழங்குகின்றது. அவ்விடியோசையைக் கேட்டுப், பெண்மான்போல் அஞ்சியோடி, ஊடலை மறந்து அவர் கொழுநரைத் தழுவிக்கொள்கின்றனர். தளர்வுள்ள பிணைப்பை வலுப்படுத்தும் திறன் உள்ள கார்காலம் வந்ததாக! கரிய முகில்கள் மேய்கின்ற கார்காலம் வந்ததாக!! இப் பாரின்கண் உயிர்க்கும் பல்கோடி உயிர்களும் தம்முள் மகிழவும், ஒன்றோடொன்று கலக்கவும், எழில்போர்த்தி நிற்கவும், தேன் போல் இனிமையான நல்ல நீரையே மழையாகச் சிந்துகின்ற இக் கார்காலம் வந்துற்றதாக!

(நூல் தொடர்ச்சி)

மழைக்குழல், மலர்முகம், மருவிற் பிறைநுதல்,
குழைசெவி, புருவக் கூன்வில், கலைக்கண்.

தென்றல் மூக்குத், தேள்விளை ஈரிதழ்,
முத்தப் பல்வரி, முழுமணித் தாடை,

கழைதோள் காந்தட் கடிமலர்ச் செங்கை,
பிழையா ஓவியப் பெருமார், பீர்க்கிடை,

நலியா இசைபயில் நாடக மணிக்கால்,
ஒலியெழு சிலம்பச் சீரடி, கூருகிர்.

புனையிளம் பாவையர் பொழிநீர் அஞ்சி,
மனையணி தவிர, மற்றணி துறக்கத்,

தேர்ந்தசெம் பட்டுடை தலைமுதற் புரள,
ஈர்ந்துகில் உடல்வனப் பெடுத்துக் காட்ட,

தாழை, மகிழந் தாழ்குழல் அணிந்தே,
மாழைக் கருங்கண் மைவணம் துறப்பக்,

கொம்மைச் சூட்டகம் குழையகில் மறப்ப,
செம்மைப் பீதைச் சீரடி வெறுப்ப,

அரிமயிர் முன்கை அணிவளை வீழ்த்த,
எரிமருங் கமர்ந்துடல் இளஞ்சூ டேற்ற,

பனிச்சுவர் மனைதொறும் பல்புகை யூட்ட
தனிச்சுவை சூட்டூண் தணல்மருங் குண்ண,

கொழுந்தயிர் விரும்பார், துளிர்புனற் குடியார்,
பழந்தேன் ஒதுக்கிப் பால்மிக வருந்தி,

வாடை மாடம் ஆடை போர்த்தே
ஊடல் உள்ளத் துயர்வுணர் வடக்கி,

அயிரகிற் புகைத்த அறைதனி புகுந்து,
உயர்நெடுங் கதவத் துட்டாழ் முடுக்கி,

கால்குடைத் தெடுத்த கட்டில் ஏறி,
வேற்கண் பெண்டிர் விழிவழி மேவ.

ஏறுடற் கொண்கண் இரந்துட் புக்க,
கூறுமொழி ஏலாக் குழைசெவி புலப்ப,

அடைமழை நடுவழி அகப்பட் டதுஉம்,
குடையொடும் போகாக் காரண முரைத்தும்,

ஓரில் ஒதுங்கி உண்கண் ஒருத்தி
நேரில் பட்ட நெடுங்கதை மொழிந்தும்,

காளை யிரப்பக், கடுஞ்சின மெழுமவ்,
வேளை யதிர்குரல் வல்லிடி முழக்க,

அஞ்சி மடவரல் அவன்றோள் தழுவக்,
கொஞ்சுமான் பிணையொடு கொழுநன் மகிழக்,
கார்வந் தன்றே! கார்வந் தன்றே!
பாரின் றுயிர்க்கும் பல்லுயிர் பரவவும்

சீர்வந் தார்ப்பவும் சிந்துதேன் மாமழைக்
கார்வந் தன்றே! கார்வந் தன்றே!

(தொடரும்)

---

இளைஞரே! நீங்கள் செல்வநிலையிலில்லாத ஓர் ஏழையின் பெண்ணை மணந்து கொள்வீராயின், உங்கள் மனைவியின் வழிவருகின்ற செல்வத்தை இழந்துவிடலாம்! கல்வி அறிவில்லாத ஒருத்தியை மணந்து கொள்வீராயின், கல்வி நலத்தால் ஏற்படுகின்ற குடும்ப வளர்ச்சியை நீங்கள் இழந்துவிடலாம்; உங்கள் மொழியறியாதவளும் நீங்கள் அறியாத வேற்றுமொழிக்காரியையும் நீங்கள் மணந்துகொள்வீரானால், அவளோடு கருத்தொன்றிப்பேசி வாழ்வில் நேரும் இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்ளும் அரிய இணைப்பை நீங்கள் இழந்துபோகலாம்; இவ்வாறின்றி அழகும், பண்பும், செல்வமும், பெற்று நீங்கள் பேசுகின்ற மொழியையே பேசுபவளும், ஆனால் அறியாரால் தாழ்ந்த சாதிக்காரி என இழித்துப்பேசுபவளும் ஆகிய ஒருத்தியை நீங்கள் மணந்துகொள்வதால்

**நீங்கள் இழப்பது ஒன்றும் இல்லை.**

# தாளிகையின் உரிமை அறிக்கை

(See Rule 8 Form IV)

(1) வெளியிடுமிடம்: ... தென்மொழி அலுவலகம்
நெல்லிக்குப்பம்
தென்னாற்காடு மாவட்டம்
தமிழகம்.

(2) வெளியிடும் காலமுறை: ... திங்கள் இருமுறை.

(3) அச்சகத்தார் பெயர், இனம், முகவரி; — திருவாட்டி; தமிழரசி (தமிழர்)
குரு அச்சகம்
நெல்லிக்குப்பம்
தெ. ஆ. மாவட்டம். தமிழகம்

(4) பதிப்பாளர் பெயர், இனம், முகவரி: — திரு. கூ. இரா. செகந்நாதன்
தமிழர்
உரிமையர்:
வள்ளுவர் பதிப்பகம்,
நெல்லிக்குப்பம்.
தெ. ஆ. மாவட்டம்,
தமிழகம்.

(5) ஆசிரியர் பெயர், இனம், முகவரி; — பெருஞ்சித்திரன்
தமிழர்.
தென்மொழி அலுவலகம்
நெல்லிக்குப்பம்,
தமிழகம்.

(6) ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடுசெய்யப்பெற்றுள்ள தாளிகை உரிமையாளர் கூட்டாளர் இவர்தம் பெயர்களும் முகவரிகளும் ... ... — திரு. கூ. இரா. செகந்நாதன்
தமிழர்
உரிமையர்:
வள்ளுவர் பதிப்பகம்,
நெல்லிக்குப்பம்.
தெ. ஆ. மாவட்டம்
தமிழகம்.

கூ. இரா. செகந்நாதனாகிய நான் இதன்வழி மேலே காணப் பெறும் விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை முற்றிலும் உண்மையென முடிவாக அறிவிக்கின்றேன்.

— கூ. இரா, செகந்நாதன்,
வெளியிடுபவர் கையெழுத்து.

15—3—60.

# புல்லறிவு!

இக்கால் கல்வி நிலையங்களில் படித்துவருகின்ற மாணவர் எத்துணைக் கவலையோடும், விருப்போடும் தம்தம் பாடங்களைக் கற்கின்றனர் என்பதற்கும், அவர்க்குப் பொது அறிவில் நாட்டம் எப்படியுள்ளதென்பதற்கும், கீழ்வரும் செய்தி ஒரு சான்றாகும்.

அண்மையில் ஐதராபாத்தில் ஆந்திர அரசினர் அலுவல் தகுதித் தேர்வுக்குச் [Andra Service Commission) சென்றிருந்த மாணவர் தாம் எழுதிய பொது அறிவுத் தேர்வில் எழுதிய விடைகள் சில வற்றைப் பாருங்கள்,

| வினாக்கள் | விடைகள் |
|---|---|
| காமராசர் யார்? | — எகிப்து நாட்டின் தலைமை அமைச்சர் |
| அட்லி | — பாகிச்தானின் முதலமைச்சர் |
| I. A. S. | — India Andra Service |
| குதுப்மினர் | — சாசகானின் மனைவி |
| ஆர்மிச்டிஃச் (Armistice) | — அஞ்சத்தக்க ஓர் இராணுவக் கருவி |
| தலாய் இலாமா | — திபேத்தின் தலைநகர் |
| | — இரண்டாவது கோளெய்தி (Rocket) யில் வைத்து அனுப்பப்பட்ட நாய் |
| | — தால்மியா மண்களிக் குழுமத்தின் (Dalmia Cement Company) நிறுவனர். |
| சிவாசி | — புகழ்பெற்ற மிகப்பெரிய, மொகலாய அரசர் இராபர்ட் கிளைவுடன் போர் செய்தவர் |
| குருநானக் | — புத்த சமய நெறியைக் கண்டவர். |
| | — முகமதிய சமய நிறுவனர். |
| இராஞ்சி டிராஃபி | — சப்பானில் உள்ள ஒரு புனித இடம் |
| | — சுபாச் சந்திர போசின் சாம்பல் வைக்கப் பட்டிருக்கின்ற இடம் |
| | — ஒரு சிறந்த பேச்சாளர் |

# திருத்திப் படிக்க

சென்ற இசை 14-ல் வந்த 'ஓவியச்சேய்' என்ற பாடற் பகுதியில், ஐந்தாம் பாட்டின் இறுதி இரண்டடிகளைக் கீழ் வருமாறு திருத்திப்படிக்க வேண்டுகின்றோம். கண்கட்குப் பிழை பிழைத்தது; கருத்துக்குப் பிழைக்கக் கூடாதன்றோ?

'அன்புடன் அவள ணைத்த
அழகுச்சேய் ஒருபா மாலை'

# வள்ளுவரே!

(1) வள்ளுவரே, வாழ்வாங்கு வாழ்ந்தவரே, வையமெலாம்
கொள்ளும் ஒருநூல் கொடுத்தவரே,—தெள்ளுதமிழ்ப்
பேரை வளர்த்த பெரியாரே! உம்மையலால்
ஆரை மதிக்கும் அறிவு?

(2) கையி லெழுத்தாணி, கற்றைப் பனையோலை,
பொய்யிலகத் தன்பு பொழிவிழிகள்,—மெய்விளக்கு
மேற்றுண்டு, வேட்டி, விளங்குமுடி யாகவொரு
தோற்றம் படைத்தார் துணிந்து.

(3) காட்டா தனவெல்லாங் காட்டிக் கடலுலகம்
வேட்ட பொருளை விரித்துரைத்துப்,——பூட்டைத்
திறந்தீர்; இருந்தொழுக்கச் செந்நெறியில் மேவ
மறந்தார் தமிழ்மா னவர்.

(4) தம்மை மறந்து, தமிழ்மறந்து, தக்காராம்
உம்மை மறந்துள் ளுணர்விழந்து—செம்மை
துறந்தொருகாற் சோர்ந்தார். துடித்தெழுந்தா ரின்று;
பிறந்ததொரு தன்மானப் பேர்.

(5) ''முந்தைப் பெருமை, மொழிப்பெருமை, மொய்ம்புறுநூல்
தந்த பெருமை தமை மதிக்க—இந்தவொரு
வல்லவரைக் காட்டு''மென, வாளா விருந்தவர்தாம்
நல்வினையாற் செய்தார் நகர்ந்து.

(6) அஞ்சற் படிவம் அமைவோ அமைவிலையோ
விஞ்சு முயற்சி விறல்பெரிது—மிஞ்சும்
அறிவுடைய காமரா சாட்சிக் கிதுவும்
செறிவுடைய வாக்கச் செயல்.

(7) நாட்டி லுமை நன்ருகக் காட்டி நலமுரைத்த
போட்டியிலே மூவர் புகுந்துள்ளார்;—தேட்டமிகும்
ஈவேரா, கல்வி இசைசேர் அவிநாசி,
ஆவனசெய் சுப்புரா யன்.

(பின்புறம் பார்க்க)

# தென்மொழி

— நெல்லை. கௌதமன் —

தமிழ், தமிழகம், தமிழ்ப்பண்பு, தமிழ் மக்கள், தமிழ் மொழி, தம் இனம், தம்நாடு, தென்னவர், தென்மொழியினர் என்று தமிழர் தம்மையும் நாட்டையும், மொழியையும் போற்றி வாழ்ந்தனர்.

'என்றுமுள தென்மொழி இயம்பி இசைகொண்டான்' என்றும், தென் தமிழை வடமொழியை', என்றும், 'திடமுறுத்தி அம்மொழிக்கு எதிராக்கிய தென்சொல் மடமகள்' என்றும் அடைமொழி கொடுத்துத் தமிழையும் தமிழ்நாட்டையும் தாமே குறித்துக்கொண்டனர். 'தென்மொழி' என்ற தொடரால் தமது இனப்பெருமையை நிலைநாட்டிய பெருமை இளங்கோவடிகளுக்கு உரித்தானதாகும்.

இவ்வாறு தமிழரே தம்மைத் தென்மொழியினர், தென் தமிழர் என்று குறிப்பிட்டமை ஆரியத்தோடு தமிழர் நெருங்கிய தொடர்புகொண்ட பிறகு, ஆரியத்தை வடமொழி என்றும், அவரை வடவர் என்றும், தமிழையும் தமிழரையும், தென்தமிழ், தென்மொழி, தென்மொழியாளர் என்றும் குறிப்பிட்டுக்கொண்ட

---

[முன்பக்க (வள்ளுவரே) தொடர்ச்சி]

(8) முந்து தமிழின் முடியானீர்! மூலையிலே
வெந்து கிடந்து வெளிப்பட்டீர்!—எந்தம்
உயிருக் குயிரானீர்! ஓங்குதமிழ் வாழ்வுப்
பயிருக் கினித்தான் பலன்.

(9) வள்ளுவமே செந்தமிழர் வாழ்வுத் திருவிளக்காம்;
உள்ளபிற வெல்லாம் உதவிகளாம்;—பள்ள
மடையிற்போல் பாயுமால் வாகாய்த் தமிழர்
நடையில் மொழியின் நலம்.

(10) "உள்ள தொகுப்பிலே உண்மை யுணருதற்குத்
தெள்ளுமுறை யாதெனினும் சேருங்கள்;—உள்ளிமிகச்
சேர்த்த பொருளைச் சிதறாமல் காப்பி"ரென
ஆர்த்தெமக்குச் சொல்வீர் அறம்,

— ம. அரங்கநாதன்.

னர் என்பதே எளிதில்வரும் முடிவுகளாகும். கி. பி இரண்டாம் நூற்றுண்டாகிய சிலப்பதிகாரக் காலத்திற்கு முன்னேயே தென் தமிழ் என்று வழங்கினர்; எதனுல் என ஆராயுமிடத்து, தொல் காப்பியத்தில் ஆரியமொழி வடமொழி என்று குறிப்பிட்டமை தான் எனப் புலனுகின்றது. தமிழ் 'தென்' என்று குறிப்பிடப் பெறவில்லை.

சிலப்பதிகாரத்திலும் தொல்காப்பியத்திலும் தமிழகத்தின் எல்லையைக் குறிப்பிடும்போழ்து தென் எல்லையாகக் குமரி (ஆறு) ஆகவும், வடக்கே வேங்கடமாகவும் அவர் கொண்டனர். சிலப் பதிகார நூலிலும் பிற இடங்களில் வரும் செய்திகளால் குமரி என்பது ஒரு மலைக்கும் ஓர் ஆற்றுக்கும், அவற்றைச் சார்ந்த நாட்டுக்கும் பெயர்களாம் என்று அறிகிறேம். மேலும் 'வடிவே லெறிந்த வான்பகை பொருது பஃறுளியாற்றுடன் பன்மலையடுத் துக் குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள என்ற சிலப்பதிகார நூலில் வரும் அடிகளால் இன்றைய குமரிமுனைக்கு நெடுந்தொலை வரை நிலம் பரந்திருந்ததென்றும், அதில் இன்றைய மேற்குத் தொடர்ச்சி மலையின் தொடர்ச்சியாகக் குமரிமலை, பன்மலை முதலிய மலைகளும், குமரியாறு, பஃறுளியாறு முதலிய ஆறுகளும் இருந்தன என்றும் கேள்வியுறுகிறேம். பஃறுளியாற்றிற்கும் குமரிக் கோட்டுக்கும் நடுவில் பரந்து விரிந்து கிடந்ததுதான் தமிழகமாகும், அதனைக் கடல் கொண்டுவிட்டது.

கலித்தொகையில் இதுபற்றி ஒரு குறிப்பு வருகிறது.

'மலி திரையூர்ந்து தன் மண் கல் வெனவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார் நாடிடப்படப்
புலியோடு விண்ணீக்கிப் புகழ்பொறித்த கிளர்கொண்ட
வலியினுன் வணங்கியே வாடாச் சீர்த் தென்னவன்'

எனக் கலித்தொகை தெரிவிக்கும் இக்கூற்று, குமரிக்கும் பஃறுளீ யாற்றுக்கும் இடையே இருந்த நாடு பாண்டிய மன்னனுக்குரிய தாக இருந்தது. அந்நிலப்பரப்பு கடல் கொள்ளப்படவே, பாண் டியன் இழந்த நிலப்பரப்புக்கு ஈடாகச் சில பகுதிகளை சோழ, சேர நாட்டினிடை நிறைவுற்றுன் என்பதாகும்.

இங்ஙனம் கடல்கொள்ளப்பட்ட நாடுகள் கொண்ட நிலப் பகுதியின் தலைநகரம் கபாடபுரமென்றும், அங்கே ஒரு தமிழ்க் கழகம் இருந்ததென்றும், அது இரண்டாவது தமிழ்க்கழகம் என் றும், அக்காலத்துத்தான் தோல்காப்பியம் தோன்றியதென்றும் அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகாரப் பாயிரத்திலும் இறையனுர் அகப்பொருள் உரையிலும் தெரிகின்றன. இக்கூற்றுக்களுடன் வடமொழி பாரத ராமாயண நூல் குறிப்புக்கள் முற்றிலும்

பொருத்தமுடையவையாயிருக்கின்றன. பாரதத்தில் பாண்டியன் தலைநகர் மணலூர் என்றும், இராமாயணத்தில் அவன் தலைநகர் கபாடபுரம் என்றும் கூறப்படுகின்றன.

இக்கூற்றுக்களை வெறும் கற்பனைக் கூற்றுக்கள் என்று வேறுபலரும் தட்டிக்கழிக்கப் பார்க்கின்றனர். ஆனால் பழைய நூல்களின் குறிப்புக்கள் பல் வேறிடத்தும் ஒருமுகப்பட்டு இதனை வலியுறுத்துகின்றன, புறநானூற்றின் பாட்டு ஒன்றில் ஓர் அரசனுக்கு வாழ்த்துக்கூறப்படும் இடத்தில் ஒரு புலவர் "நின் வாழ்நாள் நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" ஆகுக என வாழ்த்துகின்றார். இவற்றால் இவ்வாறுகள், மலைகள், நாடுகள், வரலாற்றில் இடம்பெற்ற உண்மைக் கூற்றுக்களையன்றிக் கற்பனைகளோ மிகைக்கூற்றுக்களோ அல்ல என்பது வெள்ளிடைமலை.

அங்ஙனமே கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்டு, பின்னே கடல்கொண்ட நாட்டில் தொல்காப்பியம் தோன்றிய தென்றால், தொல்காப்பியத்தில் கூறப்படும் தமிழகத்தின் தென் எல்லை இன்றிருக்கும் குமரிக்கும் தெற்கே இருந்தது என்பது பெறப்படும்.

'வடவேங்கடம் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறும் நல்லுலகத்து' என்ற தொல்காப்பியப் பாயிரச் செய்யுளில் தென்குமரி என்றது இன்றைய குமரிமுனையை யன்று. கடலுள் ஆழ்ந்த அன்றைய குமரிக்கே உரியதாகும். எனவே சிலப்பதிகாரத்திற்கு முன்னைய நூற்களில் தமிழைத் தென்மொழி என்று கூறும் வழக்கு இல்லையென்றால், அன்று வட வாரியத் தொடர்பு தமிழர்க்கும் இல்லை என்பதோடு குமரிக்கண்டத்திற்குத் தெற்கே தமிழ் வழங்கியநாடு இல்லை யென்பதுமாகும்.

இன்றைய குமரிமுனைக்குத் தெற்கே ஒரு காலத்தில் பரந்த நிலப்பரப்பு இருந்தது என்பதும், இந்திய நிலப்பகுதியின் தென்பகுதியிலேதான் முதலில் மாந்தன் தோன்றினான் என்பதும் தென்னாடு முழுவதும் அன்று ஒருமொழியே வழங்கியது என்பதும், அது தென்மொழியாகிய தமிழேயாகும் என்பதும், நிலநூல், மொழிநூல் ஆகியவற்றின் முடிவாயுமிருக்கின்றன. பேராசிரியர் ஃஏக்கேல் இதனை இலெமூரியாக்கண்டம் என்றார். தமிழ்ஆராய்ச்சியாளர் இதனைக் குமரிக்கண்டம் என்றனர். இந்த நிலப்பரப்பு ஆப்பிரிக்காவோடு ஒன்றியிருந்தது என்றும், அன்று விந்தியத்திற்கு வடக்கேயுள்ள நாடு கடலில் ஆழ்ந்திருந்தது என்றும், பின்னை நிகழ்ந்த நிலநடுக்கத்தினால் தென்கோடு கடலுள் ஆழ்ந்து பனிமலையும் வடநாடும் நீர்மீதே எழுந்து நின்றதாகவும் அறிவியலறிஞர் ஒத்துக்கொண்டனர்.

வரலாற்றுமுறையில் பார்க்கும்போழ்து உலகிலே நாகரிகங்கள் எல்லாம் தென்பகுதியில்தான் தோன்றியுள்ளன.

ஐரோப்பாவின் தென் பகுதியான கிரீசு, உரோம், ஈரான் ஆகிய இடங்களில் தான் முதன்முதல் நாகரிகம் தழைத்தது. அமெரிக்காவிலும் தென் பகுதியில் அமைந்துள்ள மெக்சிகோ, பெரு முதலிய இடங்களில்தான் முதலில் நாகரிகம் தோன்றியது. சீனாவிலும், தெற்கு சீனாவிலே பண்டை நாகரிகம் தோன்றியது. சப்பானிலும் அவ்வாறே.

அந்த முறையிலேதான், தென் இந்தியாவிலும் பண்டை நாகரிகம் தோன்றியது என்பதற்குச் சற்றும் ஐயப்பாடில்லை. தென்பகுதி எங்கணும் இவ்வாறு நாகரிகம் தோன்றுவதற்குக் காரணம் தட்ப வெப்ப நிலையே.

இந்திய நிலப்பகுதியின் தென்பகுதியிலேதான் நாகரிக மாந்தன் முதலில் தோன்றி வடக்குநோக்கி அவனுடைய நாகரிகத்தைப் பரப்பினான் என்பது பெறப்படும்.

கடலூழி நிகழ்ந்த காலத்தே தென்னவன் மாகீர்த்தி தெற்கிருந்து வடக்கேறினான். கழகக் காலத்தே கரிகாற் பெருவளவனும், சேரன் செங்குட்டுவனும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் தெற்குநின்று வடக்கே ஏகினர். பின்னர் சோழப் பேரரசர் காலத்தும் அவ்வாறே தெற்கிருந்து வடக்கே நோக்கித் தமிழர் செல்வதற்குக் கடல்கோளும், ஏனைய தமிழர் வாணிக நெறியுமே இயற்கைக்காரணங்களாயிருந்தன. இடையிலே அடர்ந்த 'தண்டகாரண்யம்' நெடுங்காலம் கடத்தற்கரியதாய் இருந்ததால் திரைகடலோட்ட திறம்பெற்ற தமிழர் மேற்குக் கடற்கரை வழியாகவும், கிழக்குக் கடற்கரை வழியாகவும், வடக்கும் மேற்கும்; கிழக்கும் சென்றனர். வடமேற்கே சிந்து வெளிகளை அடைந்து அங்கே சிந்துவெளி நாகரிக இருக்கைகள் எனக்கருதப்படும் ஃஅரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய நாடுகளில் தங்களது நாகரிகச் சின்னங்களைப் பரப்பி வாழ்ந்தனர். பின் ஒரு நிலக் கடலகத்தை அடைந்து சுமேரியராகி, வாழ்ந்த பின்னர், மேற்குக் கணவாய் வழிப்புகுந்து வடஇந்தியா வந்தனர் பின்னர்தான் நாகரிகத்தில் குறைந்த மக்கள் (ஆரியர்) வந்து நெருக்கி, தெற்கு நோக்கி வந்து, விந்தியமலை இயற்கை அரணளிக்கத் தென்னாட்டில் நிலையாகத் தங்கிவிட்டனர். எனவே தமிழர் தாம் சுமேரியராகவும் வந்தனர் எனப் படுகின்றது. கால்டுவெல் கண்காணியாருங்கூட பலுசித்தானத்தில் திராவிட இனமொழியான 'பிராகி' இன்னும் வழங்கி வருவது கண்டு வடக்கிலிருந்தும் வடமேற்கிலிருந்தும் தென்னாடு நோக்கி வந்தது தமிழரும் தமிழர்தம் இனமும் என்று கருதமுற்பட்டார்.

இவை எல்லாவற்றையும் வைத்து ஒரு முடிவுக்கு வந்தால் தென்திசை மாந்தனின் பிறப்பிடம். நாகரிகத்தின் தொட்டில்; நாகரிகக் குழவியைத் தாலாட்டி வளர்த்த கிள்ளைமொழி 'தென்மொழி' எனக் கூறவே தோன்றும்.

# நல்லதும் தீயதும்

கனி இருக்கக் காயினைக்
கவர்ந்து தின்ன நினைப்பரோ?
இனிது இருக்கத் தீயதை
ஏற்றுச் செய்தல் நல்லதோ?

நிழல் இருக்க வெயிலிலே
நடந்து செல்லு வாருண்டோ?
குழல் இருக்க இடியினைக்
கேட்டு மகிழு வாருண்டோ?

வீடு இருக்க வெளியிலே
விழுந்து தூங்கப் போவரோ?
நாடு இருக்கக் காட்டினை
நாடி வாழல் நல்லதோ?

கிளி இருக்கக் காக்கையைக்
கூட்டில் வைத்துக் காப்பரோ?
உளி இருக்க விரலினால்
உருவம் செதுக்க முனைவரோ?

அன்பு இருக்க நெஞ்சிலே
அழுக்கு எண்ணம் வைப்பரோ?
பண்பு இருக்க விலங்குபோல்
பழகி வாழல் நல்லதோ?

உண்மை இருக்கப் பொய்யினை
உரைத்து வாழல் ஏற்றதோ?
நன்மை இருக்கத் தீமையை
நாடிச் செய்தல் நல்லதோ?

# நிறங்கள்

மல்லிகைப் பூ வெள்ளை நிறம்
மாலை கட்ட உதவுமாம்!
புல்லும் இலையும் பச்சை வண்ணம்;
பசு விரும்பி உண்ணுமாம்!

வானம் எங்கும் நீல வண்ணம்;
வட்ட நிலா நீந்துமாம்!
கானக் கிளியின் மூக்குச் சிவப்பு!
கனியைக் கடித்துத் தின்னுமாம்!

எலுமிச் சம்பழம் மஞ்சள் நிறம்;
எங்கும் பழுத்துத் தொங்குதாம்!
உலவும் காக்கை கறுப்பு வண்ணம்
ஒளிந்து திருடித் தின்னுமாம்!

பாடல்கள் இரண்டும் துரை. மாணிக்கம் எழுதிய ''பள்ளிப் பறவைகள்'' என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பெற்றன.

# தமிழின் பொற்காலம்

திருவள்ளுவர் பிறப்பதற்கு முன் ஒரு நானூறு ஆண்டும், அவர் பிறந்த பின் ஒரு நூறு ஆண்டும் சேர்ந்து முடிந்த ஓர் ஐந்நூறாண்டுந் தமிழ்மொழி மறுவற்ற மதிபோற் கலை நிரம்பி விளங்கிய காலமாகும். அக் காலத்திலே, சிறந்த புலவர் பலர் தோன்றிப் பலவகையான அரிய பெரிய செந்தமிழ் நூல்கள் இயற்றினர்: இப்புலவரைப் போற்றித் தமிழை வளம் படுத்துவதற்கு ஆவல் மிக்க அரசர் பலரும் ஆங்காங்கு மிக்கிருந்தனர். தமிழ் அரசர் பலர் கல்வி வளத்தாலுஞ் செல்வ வளத்தாலும் மேம்பட்டுப், போர் வல்லமையிலும் பெருமையடைந்து, தமிழ் மொழியினைப் பலவிடங்களிலும் பெருகச் செய்வதிற் கருத்தூன்றினராய் இருந்தார்.

இக்காலத்தே தான் தனக்கு ஒப்பும் உயர்வும் இன்றி விளங்கா நிற்குந் **திருக்குறள்** என்னும் அரும் பெருநூல் எழுதப் பெற்றது: **சிலப்பதிகாரம், மணிமேகலை** முதலான சிறந்த தமிழ்க் காப்பியங்களும், **பழமொழி, நான்மணிக்கடிகை** முதலான அறநூல்களுந் தோற்றமுற்று எழுந்தன. இவ் வைந்நூறாண்டுகளுக்கு முன்னும் பின்னும் இருந்த தமிழ்ப் புலவராற் பாடப்பட்டுச் சிதறிக்கிடந்த அருந்தமிழ்ப் பாட்டுக்களெல்லாம் ஒருங்கு திரட்டப்பெற்று, **அகநானூறு, புறநானூறு, கலித்தொகை** முதலிய வகை வகைத் தொகை நூல்களாக இக்காலத்திலேதான் ஒருங்குபடுத்தப்பட்டன. பண்டைக் காலத்திலே செய்யப்பட்ட **தொல்காப்பியம்** என்னும் அரியபெரிய தமிழ் இலக்கணத்தில் மிகச்சிறந்த பகுதியான அகப்பொருளின் விரிவையெல்லாஞ் சுருக்கி அதனை வடித்த பிழிவாக இயற்றப்பட்ட **இறையனாரகப்பொருள்** என்னும் மணவியற்கை நூல், பன்னெடுங் காலமாக மறைந்துகிடந்து பின்னர் இக்காலத்திலேதான் வெளிவந்து உலவலாயிற்று.

இன்னும் இக்காலத்திலே இன்றியமையாது அறியற்பாலதாஞ் சிறப்பியல்பு ஒன்றுண்டு. இதற்கு முன்னெல்லாந் தமிழ் பெரும்பாலுஞ் செய்யுள் வழக்கிலேயே பெருகிவந்தது: மற்று இக்காலத்திலோ அதனோடு உரை வழக்கும் விரவி பரவத் தொடங்கிற்று. சொல் விழுப்பமும் பொருள் விழுப்பமும் பொதிந்த மிக இனியதோர் உரை, மிக நுணுக்கமான அறிவினையுடைய **நக்கீரர்** என்னும் நல்லிசைப் புலவரால் **இறையனாரகப்பொருள்** என்னும் நூலுக்கு வரைந்து தரப்பட்டது. இதற்குப் பிற்காலத்தே வடமொழிக் கலப்பாற் புதிது தோன்றிய **விருத்தப்பா** என்பது இவ்வைந்நூற்றாண்டுகளும் விரிந்து பெருகிய தமிழ்நூல்களில் எட்டுணையும் காணப்படாமை பெரிதும் நினைவு கூரற்பாற்று.

— மறைமலையடிகள் —

முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை.

பண்டாரகர்

**மா. இராசமாணிக்கனார்** எம்.ஏ.எம்.ஓ.எல்.

அவர்தம் அரிய நூல்கள்.

பழந்தமிழர் வாழ்வு முறைகளையும், வரலாற்றுச் சிறப்புக்களையும், ஆட்சி நெறிகளையும், கலைத் திறன்களையும் செப்பமாக எடுத்துக்கூறும் உயர் தமிழ் நூல்கள்.

**இன்றே வாங்கிப் படித்துப் பயனடைக.**

| | |
|---|---|
| தமிழக வரலாறு | 3—00 |
| தமிழக ஆட்சி | 2—00 |
| தமிழகக் கலைகள் | 2—50 |
| தமிழர் நாகரிகமும் பண்பாடும் | 2—50 |
| சைவ சமய வளர்ச்சி | 5—00 |
| தமிழரசி (புதினம்) | 2—50 |
| நாட்டுக்கு நல்லவை (தமிழகப் பெண்மணி ஒருத்தியின் சீர்திருத்தச் செயல்களைக்கூறும் அருமையான புதினம்) | 3—50 |

விற்பனை உரிமை

**பாரி நிலையம்**

59. பிராட்வே

சென்னை 1.

சேலத்தில் நீங்கள் மறவாத ஒன்று!

# கண்ணன் ஓவியக் கூடம்

குகை, சேலம்—1

○

எழுத்து, உருவ விளம்பரப் பலகைகள்.

திரைப்பட விளம்பரக் கண்ணாடிகள்
(CINIMA SLIDES)

புத்தக அட்டைப்படங்கள்

முதலியவை தேவைப்படுகின்றனவா?

உடனே எழுதுங்கள்

(வெளியூர் வேலைகளை உடனே பார்க்கின்றோம்)

○

**KANNAN CHITHRA SALAI,**

TIRICHI ROAD,

GUGAI, SALEM—1.


வள்ளுவர் பதிப்பக உரிமையாளர், கூ. இரா. செகந்நாதன் அவரால் நெல்லிக்குப்பம் (தெ. ஆ. மாவட்டம்) குரு அச்சகத்தில் அச்சிடப்பெற்றுப், பெருஞ்சித்திரன் அவரை ஆசிரியராகக்கொண்டு வெளியிடப்பெற்றது.